பக்கங்கள்: 8 விலை ரூபா: 10

# சங்கமம்
# SANGAMAM

''அகர முதல எழுத்தெல்லாம் ஆதி
பகவன் முதற்றே யுலகு''

கூட்டுறவுக் குரல் Voice of Co-op

ஆறு 2 திருவள்ளுவர் ஆண்டு 2029 மே 1999 அருவி 9

# இலட்சியத்தால் ஒன்றுபட்டு விடுதலையை வென்றெடுப்போம்!

- அக்கராயன் போர் எழுச்சிக்குழு -

**நாம் எமது தாயக மண்ணை எமது உயிரிலும் மேலாக நேசிக்கிறோம் என்பதற்கு இன்றைய போர் எழுச்சி. உலகின் கண்களை திறக்கட்டும். மனச்சாட்சிகள் பேசட்டும் எமது தாயக தேசம் எமது இனத்தின் உயிருக்கு மேலானது என்பதை உலகுக்கு எடுத்துக் காட்டுவோம் என அக்கராயன் போர் எழுச்சிக் குழு, தனதறிக்கையில் எடுத்துரைத்துள்ளது.**

(அலுவலக நிருபர்)

எமது தாயகத்தின் இதயதினை ஊடுருவி நிற்கும் ஆக்கிரமிப்பாளரை எமது மண்ணிலிருந்து விரட்டியடிக்கும் வரை எமது மக்களின் எழுச்சியுள்ள உணர்ச்சி ஓய்ந்துவிடப் போவதில்லை எனவேதான் இன்று தமிழீழ மக்கள் 1999ம் ஆண்டை தமிழீழத்தின் போர் எழுச்சி ஆண்டாக பிரகடனப்படுத்தி போருக்கான துறை சார்ந்த வேலைத் திட்டங்களை மக்கள் ஊடாக நகர்த்தி வருவதுடன் இதற்கான எழுச்சிக் கூட்டங்கள், பரப்புரைகள் போர்க்கால கலை கலாசார நிகழ்வுகளை நடாத்தி வருகிறார்கள் இவை அனைத்தும் எமது விடுதலையை விரைவுபடுத்தவும் வென்றெடுக்கவும் இந்த கொடிய போருக்கு விடிவும் முடிவும் கிடைக்கும் என்ற நம்பிக்கையும் உண்டு என வன்னி பிரதேசங்களின் போர் எழுச்சிக் குழுக்களின் அறிக்கைகளும் போர் எழுச்சி உரைகளும் கலை நிகழ்வுகளும் கட்டியம் கூறி நிற்கின்றன.

## பனம் தொழில் வல்லுநர் விபத்து நிதி

வடமாகாண பனை-தென்னைவள அபிவிருத்திக் கூட்டுறவு நிறுவனங்களின் பேரிணையத்தால், நடைமுறைப்படுத்திவரும் பனம்தொழில் வல்லுநர்களுக்கான விபத்து ஒப்புறுதித் திட்டம் சிறந்த முறையில் செயல்பட்டு வருவதால் இதேபோன்று யாழ்ப்பாண மாவட்டத்திலுள்ள பனை- தென்னைவள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களிலும் நடைமுறைப்படுத்துவது தொடர்பாக பேரிணையம் கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர்வ/இ ஊடாக யாழ் மாவட்ட ப.தெ.வள அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கங்களுக்கு கடிதம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது இது பற்றி வ-இ கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர் பேரிணையத்திற்கு அறிவித்துள்ளதாக பொது முகாமையாளர் இ.சிவனேசன் தெரிவித்துள்ளார்.

## மக்கள் குறைகள் களைந்த இடம்பெயர் செயலக சேவை

### 7162 பிரச்சினைகளில் 6026க்கு தீர்வு காணப்பட்டது

கிளிநொச்சி கிழக்கு பொது மக்களின் நலன் கருதி மாவட்டத்திலுள்ள சகல திணைக்களங்களுடன் இணைந்து கிளி மாவட்ட அரசாங்க அதிபரின் இடம்பெயர் செயலக சேவை கிளி இராமநாதபுரம் மகா வித்தியாலயத்தில் மே 15, 16ம் திகதிகளில் காலை எட்டரை மணி முதல் நள்ளிரவு வரை நீடித்து சிறப்புடன் இடம் பெற்றது.

கிளி செயலக உத்தியோகத்தர்கள் 213 பேரும், கல்வித் துறையைச் சார்ந்த 185 பேரும் கரைச்சி கிழக்கு ப.நோ.கூ. சங்க ஊழியர்கள் 45 பேரும், கிளி தெல்லிப்பளை ப.நோ.கூ. சங்க ஊழியர்கள் 18 பேரும் கரைச்சி வடக்கு ப.நோ.கூ. சங்க ஊழியர் 18 பேரும் தொண்டர் அடிப்படையில் நின்று உழைத்தனர் இவ் இடம்பெயர் செயலக சேவைக்கு உறுதுணையாக நின்று உழைத்தவர்களால் 6026 பிரச்சினைகளுக்கு உடனடியாக தீர்வு காணப்பட்டுள்ளன.

உத்தேச மட்டமிட்ட நிதியிலும் பார்க்க மிகக் குறைந்தளவு நிதியே செலவழிக்கப்பட்டு முழுக்க முழுக்க மனிதவளமே பாவிக்கப்பட்டு பூரணத்துவமான சேவையை மக்களுக்கு வழங்கியுள்ளோம் என செயலக திட்டப் பணிப்பாளர் செ. நித்தியானந்தன் தெரிவித்தார்.

கிடைக்கப் பெற்ற 7162 பிரச்சினைகளில் 6026 பிரச்சினைகளுக்கு தீர்வு காணப்பட்டுள்ளது மிகப் பெரிய வெற்றிகரமான நடவடிக்கை எதிர்பார்த்ததை விட மக்கள் நல்ல முறையில் அதிக ஒத்துழைப்பு வழங்கியுள்ளதால் இடம்பெயர் செயலக சேவை பயனுள்ளதாக அமைந்துள்ளது என கிளி அரசாங்க அதிபர் தி. இராசநாயகம் தெரிவித்துள்ளார்.

இதே போன்று பூநகரி நல்லூர் மகாவித்தியாலயத்தில் யூன் 12ம், 13ம் திகதிகளில் பூநகரி வடபகுதிக்கான கிளி அரச அதிபரின் இடம்பெயர் செயலக சேவைகள் நடைபெற ஏற்பாடு செய்யப்பட்டது இதற்கான பூர்வாங்க வேலைகளை பூநகரி பிரதேச செயலகமும், கிளி அரச செயலகமும் செய்து வருகின்றன.

## கால்நடை வளர்ப்போர் கூ. சங்கம் நெய் ஏற்றுமதி

முல்லைமாவட்ட கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கம் தரமான பசு நெய்யை உற்பத்தி செய்து வவுனியாவில் சந்தைப்படுத்த ஏற்பாடு செய்து வருகிறது வவுனியாவிற்கு நெய் எடுத்துச் செல்லவேண்டுமெனக் கேட்டு சங்கம் முல்லை கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளரூடாக முல்லை அரச அதிபருக்கு விண்ணப்பம் செய்துள்ளது

அனுமதி கிடைத்தவுடன் நெய் வடபகுதிக்கு வெளியே சந்தை வாய்ப்பை பெற்றுக்கொள்ளும் என சங்க வட்டாரங்கள் தெரிவித்துள்ளன

(க)

## கூட். அங்காடி உதயம் க. கி. மக்கள் மகிழ்ச்சி

கூட்டுறவுச் சங்கங்கள் மக்களுக்கு ஆற்றும் பணி மகத்தானது. நெருக்கடிகளுக்கு முகம் கொடுக்க முடியாமல் நலிவடைந்துள்ள மக்களை பாதுகாப்பதற்கு கூட்டுறவுச் சங்கங்கள் தங்களை தயார்ப்படுத்திக் கொள்ள வேண்டும்

கரைச்சி கிழக்கு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் வட்டக்கச்சி சந்தையில் கூட்டுறவு அங்காடியை திறந்துள்ளமை பாராட்டப்பட வேண்டிய ஒன்றாகும் என கூட்டுறவு அங்காடியை திறந்து வைத்து உரையாற்றிய கிளி அரச அதிபர் இராசநாயகம் தெரிவித்தார்

கரைச்சி கிழக்கு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் கூட்டுறவு அங்காடி ஒன்றை வட்டக்கச்சி சந்தை வளாகத்தில் அமைத்துள்ளது புதிய கட்டடத் தொகுதியுடன் அமைந்துள்ள அதன் திறப்புவிழா அண்மையில் சங்கத்தின் உபதலைவர் சமுத்துக்குமாரு தலைமையில் நடைபெற்றது.

புடவை விற்பனை நிலையம், மக்கள்கடை மூலிகை உற்பத்தி கூட்டுறவுச் சங்க மூலிகை மருந்து விற்பனை நிலையம் என்பன இவ் அங்காடியில் அமைந்துள்ளன.

இத்திறப்புவிழாவில் கூட்டுறவுப் பிரமுகர்கள் பெருந்தொகையான கூட்டுறவாளர்கள் பங்குபற்றி விழாவை சிறப்பித்தனர்

இக் கூட்டுறவு அங்காடியை அமைப்பதற்கு சங்கப் பொது முகாமையாளர் சி புவனேஸ்வரனின் அயராத உழைப்பு பாராட்டுக்குரியதாகும் என பலர் அபிப்பிராயப்பட்டனர்

### அரிசி ஆலை அமைப்பு

புதுக்குடியிருப்பு வேணாவில் கிராமத்தில் அரிசி ஆலை ஒன்றை அமைப்பதற்கு புதுக்குடியிருப்பு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் நடவடிக்கைகளை எடுத்து வருகிறது

விவசாயிகளிடமிருந்து தாராளமாக நெல்லை கொள்வனவு செய்து அரிசியாக்கி சந்தைப்படுத்துமுகமாகவே இவ் அரிசி ஆலை அமைக்கப்படுகிறது இதனால் அப்பகுதி பயனாளிகள் பெரிதும் நன்மையடைவார்கள் என சங்கத் தலைவர் இரத்தினம் தெரிவித்துள்ளார் மேலும் தெரிவிக்கையில் இரு வாரத்தில் அரிசி ஆலை திறந்து வைக்கப்படும் என்றார்.

(க)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இயற்கையோடு இணைந்த "ஹைக்கூ..."

ஜென் (Zen) மதத்துறவி ஒருவர் மரணப்படுக்கையில் கிடக்கிறார், அவரைச்சுற்றிலும் கவிழ்ந்த தலைகளுடன் நிற்கும் சீடர்கள், குருவே நீங்கள் எங்களுக்கு உபதேசிக்கும் கடைசிப் போதனை என்ன? என்று கேட்கிறார்கள். துறவி இவர்களுக்கு நேரடியாக பதில் சொல்லாமல் "எனக்கு ஒரு துண்டு இனிப்பு கொண்டு வாருங்கள்" என்று கேட்கிறார்.

இனிப்பு வருகிறது அந்த கடைசித் தருணத்திலும் ஜென்துறவி ஒரு குழந்தையைப் போல அந்த இனிப்பை பார்த்து ரசிக்கிறார் பிறகு அதைக் கொஞ்சம் கொஞ்சமாக ருசித்து ருசித்துத் தாளம் போட்டுக் கொண்டே சாப்பிட்டு விட்டு இறந்து விடுகிறார். இனிப்புச் சாப்பிடுவது என்ற சாதாரண காரியத்தைச் செய்யும் போதுகூட அதை முழுஈடுபாட்டோடு ரசித்து ருசித்துச் செய்ய வேண்டும் என்பதே ஜென்துறவி, தன் சீடர்களுக்குச் சொல்லாமல் சொன்ன கடைசிப் போதனை!

யப்பானிய நாட்டில் பின்பற்றப்படும் புத்த மதத்தின் ஒரு பிரிவே இந்த Zen மதமாகும். ஜென் மதத் துறவிகளும் மற்ற மதத்துறவிகள் போல் காவியுடை அணியாமல் சாதாரண ஜப்பானியர்கள் போலவே தோன்றுவர். உலக அனுபவங்கள் அனைத்தையும் உண்மைத் தன்மையோடும், நன்றியுணர்வோடும் அன்போடும் அனுபவிக்கவேண்டும் என்பதே இவர்கள் அடிப்படைக் கருத்தாகும்.

சாதாரணமாக தேநீரைக் கூட நன்றிப்பெருக்கோடும், வாஞ்சையோடும் இரண்டு கைகளாலும் பற்றி குடிப்பதன் மூலம் தங்கள் அன்பைப் பிரதிபலிக்கும் இவர்கள் Zen Tea Ceremony எனும் நிகழ்வைஜப்பானில் அடிக்கடி நிகழ்த்துவர்.

இவ்வாறாக zen மதத்தின் அடிப்படை மையம் எண்ணமல்ல அனுபவங்களேயாகும்.

இந்த zen மத அனுபவங்களை தத்துவ உள்ளடக்கமாகக் கொண்டு உருவாகியதே ஹைக்கூ கவிதைகளாகும். இக்கவிதைகளில் தொடக்க உருவகமாக அமைய உள்ளடக்கமாக zen மதத் தத்துவம் அமைந்திருக்கும்.

இதே போன்று யப்பானிய கிராமியப் பாடல்களான "தங்கா" எனும் 5 தொடக்கம் 7 வரையான அசை அளவைக் கொண்ட படைப்புக்களின் மருவலாகவே மூன்றடிக் கவிதை வடிவமாக ஹைக்கூ அமைந்தனது முதல் இரண்டு அடிகளில் உருவகமும் ஈற்றடியில் உள்ளடக்க வெளிப்பாடுமாக அமைந்துள்ள ஜப்பானிய ஹைக்கூ கவிதைகள் சில கீழே தரப்படுகிறது

## சஞ்சிகா

நான் பிறந்த ஊரில்
இன்றிரவு என் நண்பர்கள்
சில்வண்டுகள் மட்டும்

-பேரிலான்

வாழ்த்துக்கள் இலையா
இன்னும் உயிர்வாழ்கிறாய்
இவ்வாண்டும் கொசுக்களுக்கு உணவூட்ட

மோரிடாகோ

உதிர்ந்து வீழ்ந்த மலர்
கிளைக்கு திரும்புகிறது
ஓ! வண்ணத்துப்பூச்சி

ஷீஸென்

அழகிய வண்ணத்துப் பூச்சியே
ஊசியிலை நுனிகள்
கவனம் கவனம்
சூறைக்காற்று

ஷெீஸன்

நாற்று நடும் பெண்கள்
உடல் எங்கும் சேறு
அவர்கள் பாட்டைத்தவிர

ரைஸான்

★ ★ ★

ஈழத்திலும் பலர் 'ஹைக்கூ' கவிதைப் பாணியில் கவிதைகளை வெளியிட்டிருந்தவர். இவர்களில் மலையகத்தைச் சேர்ந்த முரளிதரன் கிளிநொச்சியைச் சேர்ந்த விவேக் போராளிக் கவிஞன் கப்டன் மலரவன் ஆகியோர் குறிப்பிடத்தக்கவர்கள்.

கப்டன் மலரவனின் ஹைக்கூகவிதைகள் தொகுதி ஒன்று மலரன்னை வெளியீடாக அண்மையில் வெளியிடப்பட்டிருந்தது.

வாழ்விற்கான போராட்டத்தில் ஒரு போராளியாக இணைந்து கொண்ட இவர் அந்தப் பணியோடு இலக்கியப்பணியையும் செய்து தன் வாழ்வுக்கான போரை விரைவு செய்துள்ளார்.

கொன்ற யானையை
எறும்புகள் இழுத்துப்போயின
கோட்டை வீழ்ந்தது புலிகளிடம்

எட்டாத வாழை இலையைப்
பார்த்து வெட்டிய இலை பெருமையாய்ச் சிரித்தது
பார்சலோடு களம்போகிறேனென்று

கறையான்கள் கஸ்ரப்பட்டு கட்டிய புற்றில்
நாகம் ஆக்கிரமிப்பு
இழக்கில் இராணுவ அட்டகாசம்

எத்தியோப்பியா பஞ்சத்தைப்
பற்றி படிப்பித்துக்கொண்டிருந்தேன்
பின்பெஞ்சில் மயங்கிவிழுந்தான் அகதி
எல்லாக் கடலும் சூழ்ந்திருக்க
வலைக் கடல்மட்டும் தூங்கியது
இன்று கடற் கரும்புலி தினமாம்

(மலரவன் ஹைக்கூ கவிதைகளிலிருந்து)

## வள்ளுவனே! மன்னிப்பாயாக.

அமிழ்தினும் சுவைதருமே
அவனியில்உயர்
தமிழ் எனும் தாய்மொழி.

அறஞ் செய்து வாழ்தலின்
தமிழினம் என்றும்
புறங்காட்டி ஓடுதலன்று

அரக்கரேயாயினும் அன்போடு
ஏற்றி நல்
இரக்கம் காட்டியது தமிழினம்

ஈரமொருபுறம் இளமை
யொருபுறம் வேங்கைநிகர்
வீரமொருபுறம் கொண்டதே
தமிழ் நெஞ்சு

ஒளியைத்தரும் மெழுகினை
யார் தமிழ்மண்ணின்
விழியை நிகர் மாவீரர்

விண்ணை முட்டும் படைவலி
னும் பழந் தமிழ்
மண்ணைச் சிதைத்தல் அரிது

போருக்கு பெரியோர் இல்லை
யதால் சின்னப்
பூவுக்கு வேல்கொடுத்தாள்
தாய்

புண்ணாகிப் பூவுடல் சிதைந்த
தால் எரிமலையே
பெண்ணாகி நின்றது இங்கு

செருப்பென இனியும் நினைப்
பின தமிழர்
நெருப்பென எழுவர் நிமிர்ந்து

ஏறி மிதித்து இனியும்வலின்
அன்னியமே
நாறிப் புழுத்துச் சாவாய்.

வேல் லவன்

## மனமே கலங்காதே

ஈழப்போரை முடிவுறுத்த
போராண்டுப் பிரகடனம்
விரைவில் ஆழ்வோம ஈழத்தை
மீள்வோம் பெரும் துயரத்தை
தோள் வலிமை பெறப்
பயில்வோம் யாவரும் போர்ப்
பயிற்சி
பெறுவோம் மலையென உடலு
றுதியும் பலமும்
கலங்கி நின்ற தமிழினத்தின்
துயர்போக்கும் பெரும் படை
யாய்
வலம் வருவோம் நாமும்-போர்க்
களம் புகுவோம் நாமும்-அடடா
என்று
உலகம் வியந்து நிற்க- தெ(வெ)
றித்
திசைகள் துலங்குமெல்லோ!
கலகம் பிறந்தால்தான்
நியாயம் பிறக்குமென்பார்-
அதனால்
பிறக்கட்டும் சிங்களத்தில் கலகம்
ஈழத்தின் புதிய செய்திகேட்டு!
பிறக்கட்டும் தமிழருக்கு நியாயம்
திசைஎட்டும் புதுப்பரணி கேட்டு!
அதுவரை
நலமோடு வாழ்வோம்-நாம்
மனமே கலங்காதே

"பனையவன்"
கிளி/யாழ் ப நோ. கூ சங்கம்
ஸ்கந்தபுரம்

## பொன்னிலோர் உலகம்

வானம் இருளுகின்ற நேரம்
வானம்பாடியில் ஒரு பாட்டு
கானம் பாடுகின்ற காதல்பாட்டு
கன்னியரை மயக்குகின்ற
காளையின் பாட்டு
இது தேவையா?
நம் தமிழனுக்கு
நாம் பிறந்த மண்ணில்
நம் தங்கை மாண்டாள்
அந்நியன் ஆட்சியால்
அக்கா பூ இழந்தாள்
கன்னியர் எல்லாம்
காளையாய் மாறி
பொன்னிலோர் உலகம்
படைப்பது நிச்சயம்

நிர்வைக்குமார்

## அகதி

நேற்றுவரை
உனக்கு சொந்தம்
சகல வசதிமான
வீடு வாசல் காணிகள்
ஏர் பிடித்த உழுது
ஊர் செழித்திட
ஏராளமான வயல் நிலங்கள்
ஓட்டகம் பருகிய நீரென
சேர்த்து வைத்த சொத்துக்கள்
இன்று சொந்தம் ?
பத்து சதுர அடி நிலமும்
இரு உரப்பை கனதியும்
ஒரு நீலக் கறப்பாலும்
நாளை
உனக்கெது சொந்தம்

ஆவரங்கால் சுதன்

## கவிதை வெளி

## பகல்

விளக்குகள்
அணைகின்றன
மலர்ந்த பூக்கள்
குதூகலமாய் ?
காத்திருக்கின்றன
வண்டுகளுக்காக

வயல்வெளிகள் வயல்களுக்குள்
ஆழமாக இறங்குகின்றன
உச்ச வேளையில்
வியர்த்துச் சிந்துகிறது
சோர்ந்து போயினர்

கூலி கொடுத்துவிட்டு
முதலாளிகள்புறப்படுகின்றனர்
இது
சில மனிதர்களின்
இரவுகளுக்குள்
ஒழிந்திருக்கும் "பகல்"

ரிஷாகாந்தன்

## புயல் என்று புரியவைப்போம்

காலடியோடு சரத்தன் ஆடி
வேலவன் கோயிலை
வீறுடன் சுற்றியே
பாதங்கள் பதித்த மண்ணில்
இப்போ பூதங்கள் உலாவுதே

காற்றடிக்க கதைபேசும்
கற்பகச் சோலையில்
நேற்றிருந்து விளையாடிய
மணல் வீதியில்- பிண
நாற்றங்கள் இப்போ எடுக்குதே

காத்திருக்கும் வரை
நம் கவிதை
காற்றாக இருக்கும்
புறப்பட்டு விட்டால்
புயல் என்று புரியவைப்போம்

கிருஷ்ணா
கிளி/இந்துக்கல்லூரி

## எதிரி எல்லைசெல்வோம்

புண்பட்ட புள்ளுக்கு
மருந்திட்டான் புத்தன்
பேனைக்கூட கொலை
செய்யக் கூடாதென
மொட்டை வழித்தவன்
வாளெடுக்கும் காடைக்கு
நூல் கட்டும் பெளத்தபிக்கு
சித்தார்த்தன் இன்றிருந்தால்
தலை சிதறிச் செத்திருப்பான்

இட்ட வத்துட்டானை ஆமி
கிளர்ந்தெழுவோம் பெண்ணே
பட்ட துயர் போதும் இனி
பாயும் புலியாவோம்
சிட்டுக்களாய் நாம் சிரித்து
சிறகடித்துப் பறக்க
எட்டுதூரம் இல்லை என்றே
எதிரி எல்லை செல்வோம்

-குணா
கிளி/ இந்துக்கல்லூரி

## காலமாற்றம்

மெல்ல கடற்காற்று
வீசி சமாதானத்தை
விரும்பின

ஆனால் சமாதானத்திற்கும்
சமாதிகளும் இருக்கின்றன
அதனால்
மெல்ல வீசிய கடற்காற்று
இனி சூறாவளியாய்
வீசவும்
கற்றுக்கொண்டன

கரவை கடதே குலரூபன்
306 புதிய புன்னை நீராவி

## நீதி பிறக்கும்

குழி விளைக்கு புதுக்களம் தேடி
புகுந்து விட்ட மனிதரே!
முழுமதியா சான்றிருக்க-அதற்கு
முழுக்குப் போடவா ஆய்வுக
ளிங்கு

உவர் மண்ணை உற்றுப்பார்த்து
உலகரங்கில ஏதுமட்டும்
தடிப்பதற்கு திட்டம்
நான் மட்டும் எழுவேனானால்
நாளொன்றில் நீதி பிறக்கும்
தவித்தவர்க்கு நாளைய
உலகில் நல்லது கிட்டும்
மனிதமே! இன்னும் என்னை
தெரியவில்லையா உனக்கு
செத்துவிட்ட செம்மலர்களைத்
தாங்கிய
செம்மணித்தாய் பேசுகின்றேன்

இ சஜன்
புதுக்குடியிருப்பு ம வி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எமது வாழ்வையும், வரலாற்றையும் பிரதிபலித்த கிளிநொச்சி வலய கலைத்திறன் போட்டிகள்

எமது வரலாற்றையும் எமது வாழ்வையும் பிரதிபலிக்கும் கலை வடிவங்களை இம்முறை கிளிநொச்சி வலய தமிழ் மொழித்தின கலைத்திறன் போட்டிகளில் பிரதிபலித்தது பாராட்டக் கூடிய வகையில் அமைந்திருந்தது எனத் தெரிவிக்கப்பட்டது.

சமூக நாடகப் பிரிவில் வெற்றி பெற்ற இரண்டு நாடகங்களுமே எமது வாழ் நிலையையும், இன்றைய யாழ்ப்பாண வாழ் நிலையையும் பிரதிபலித்தன. இதே போன்று வரலாற்று நாடகப் பிரிவில் எமது வன்னியின் பண்டாரவன்னியன் வரலாற்றினை ஆண்ட கைலை வன்னியனின் கதையையே முதலிடத்தினையும் பெற்ற பாடசாலைகள் தேர்வு செய்திருந்தமை உண்மையிலேயே பாராட்டப்படக்கூடியதாக அமைந்திருந்தது. வரலாறு பற்றிய பிரக்ஞை எமது மக்களிடம் ஏற்படுவதும் தெரியவருகிறது. உண்மையில் கைலை வன்னியன் மட்டுமல்ல, அவனுடைய குடிமக்களும் ஒல்லாந்தருக்கு எதிராக அடங்க மறுத்திருந்தனர். புத்திர சோகத்தால் மன்னன் மாண்டபோதும் வணங்காமண் மக்கள் ஒல்லாந்தருக்கு தெரிவிக்காமலே தமக்குரிய அரசனை தேர்ந்தெடுத்தனர். 2 வருடங்கள் வரை ஒல்லாந்தரால் அவர்களைத் தோற்கடிக்க முடியாதிருந்தது. எனினும் இரண்டு பாடசாலைகளுமே ஒப்பனைகளை மிகைப்படுத்தி எமது அன்றைய காலகட்ட மக்களின் வாழ்வியலைப் பிரதிபலிக்காத வகையில் அமைந்திருந்தது உண்மையில் எமது பாரம்பரிய வாழ்வுகளை உடை அமைப்புக்களை அலங்கார முறைகளைப் பற்றிய தேடலினூடாக எமது பாரம்பரிய வாழ்வியல் வெளிக்காட்டப்பட்டிருக்க வேண்டும். எமது வாழ்வியல் முறைகளை கற்பனைக்கதிகமான முறைகளில் ஏற்படுத்துவது எமது வரலாறு பற்றி ஒருவகை மயக்கத்தையே ஏற்படுத்தும்.

இலக்கிய நாடகமும் சிறப்பான முறையில் அமைந்திருந்தது. நடன நாடகத்தில் முழங்காவில் ம.வி. மாணவர்களின் பதுமாசுரன் நடன நாடகம் பார்வையாளர் பலரைக் கவர்ந்திருந்தது. இது பற்றி ஆசிரியர் ஒருவர் கருத்துத் தெரிவிக்கையில் திராவிட கிராமியக் கலைகளின் செழுமைப்படுத்தப்பட்ட வடிவமே கதகளி நடன முறையாகும். பரதம் என்பது ஆரிய வழிவந்தவட இந்திய கலையாகும். எமது பாரம்பரியக் கலையெனக் குறிப்பிடக்கூடிய வடிவம் கேரளத்தின் கதகளி நடன வடிவமே எனவும் தெரிவித்தார். பல வேறு வகையான நிகழ்வுகளிலும் எமதுவாழ்வியல் முறைகள் வெளிப்படும் வகையில் இவற்றை செயற்படுத்திய அனைவருமே பாராட்டுதற்குரியவர்கள்.

| நிகழ்ச்சி | போட்டியாளர் பெயர் | பாடசாலை | இடம் |
|---|---|---|---|
| | பிரிவு 1 | | |
| வாசிப்பு | யோ. கதம்பா | கிளி / ஸ்கந்தபுரம் இல 1 | 1 |
| | வை ஜெகதீஸ்வரன் | பரமன்கிராய் அ.த.க.பா | 2 |
| | தி. கெய்க்டன் | கிளி / பெரியகுளம் ஐ.பு. அ.த. | 3 |
| பேச்சு | மு. சுழவன் | தர்மபுரம் இல. 1 | 1 |
| | ச. மேகிமரினா | குமுழமுனை அ.த.க.பா | 2 |
| | ம. மேவிற்சன் | ஸ்கந்தபுரம் இ. 1 அ.த.க.பா | 3 |
| எழுத்தாக்கம் | அ. சுகந்தி | ஜெயபுரம் அ.த.க.பா | 1 |
| | யோ. டிலானி | பிரமந்தனாறு அ.த.க.பா | 2 |
| | ப. ஸ்ரெலாவன்னீர்ச்செல்வி | புனித பற்றிமா றோ.க.வித் | 3 |
| பா ஓதல் | ஜெ. ரேர்ஸா நிருபினா | ஜெயபுரம் அ.த.க.பா | 1 |
| | வ. யுவராணி | ஸ்கந்தபுரம் இல 2 அ.த.க.பா | 2 |
| | ஆ. பாமதி | புன்னைநீராவி அ.த.க.பா | 3 |
| திருக்குறள் மனனம் | ச. கவிர்தா | ஸ்கந்தபுரம் இல. 2 அ.த.க.பா | 1 |
| | செ. பிரவீனா | தர்மபுரம் இல. 1 அ.த.க.பா | 2 |
| | சி. வினுஷா | கரியாலை நா இல 3 அ.த.க | 3 |
| சித்திரம் கருத்து வெளிப்பாடு | ஜெ. நிரோஜா | புனித பற்றிமா றோ.க.வித் | 1 |
| | நீ. நிவாகினி | கட்டைக்காடு அ.த.க.பா | 2 |
| | அ. சுஜந்தன் | கரியாலைநாகபடுவான் இல 2 | 3 |
| இறுவட் நாடகம் | குழு | கறுக்காய்த்தீவு அ.த.க.பா | 1 |
| | | ஸ்கந்தபுரம் இல 2 அ.த.க.பா | 2 |
| | | புனித அந்தோனியார் றோ.க | 3 |
| நடனம் (தனி) | ச. ஞானகௌசல்யா | தர்மபுரம் இல 1 அ.த.க.பா | 1 |
| | வ. நிரஞ்சினி | பூனியன்குளம் அ.த.க.பா | 2 |
| | சி. ஜெசிந்தா | பல்லவராயன்கட்டு இ.த.க.பா | 3 |
| | பிரிவு 2 | | |
| வாசிப்பு | ம. தஷாந்தி | இராமநாதபுரம் அ.த.க.பா | 1 |
| | க. மயூரிக்கா | வன்னேரிக்குளம் ம.வி | 2 |
| | கா. அனுஜா | வேரவில் அ.த.க.பா | 3 |
| கட்டுரையாக்கம் | ம. வைஸ்ணவி | புனித திரே. பெண். கல்லூரி | 1 |
| | தெ. தவப்பிரகாஸ் | பெரியகுளம் ஐயனார் வித். | 2 |
| | அ. பாவேஸ்வரி | வலைப்பாடு றோ.க.வித். | 3 |
| பேச்சு | பா. கஜேந்திரன் | பரந்தன் இந்து ம.வி | 1 |
| பா ஓதல் | ம. சிந்துஜா | வன்னேரிக்குளம் ம.வி | 1 |
| | உ. சதீஸ் | ஜெயபுரம் அ.த.க.பா | 2 |
| | த. மிழினி | நாகேந்திரா வித்தியாலயம் | 3 |
| செந்நெறி இசை (தனி) | இ. சிந்துஜா | ஆனைவிழுந்தான் குளம் | 1 |
| | இ. மகிஸ்சிறில்ரா | வட்டக்கச்சி அ.த.க.பா | 2 |
| | ஜெ. சர்மிலா | கரியாலை நாகபடுவான் இல 2 | — |
| செந்நெறி நடனம் (தனி) | வி. திவ்வியா | கனகபுரம் ம.வி | 1 |
| | ஆ. இனிதா | கலவட்டித்திடல் நாகேந்திரா | 2 |
| | உ. அனுலா | பூனகரி நல்லூர் அ.த.க.பா | — |
| சித்திரம் கருத்துவெளிப்பாடு | க. அம்பிகையாளன் | ஜெயபுரம் அ.த.க.பா | 1 |
| | க. பூராகவன் | கனகபுரம் ம.வி | 2 |
| | ஜீ. டொறின் ஒலிவியா | இராமநாத. கிழ. அ.த.க.பா | 3 |
| குறட்பா அறிவு (குழு) | | முருகானந்தா ம.வி | 1 |
| | | வேரவில் அ.த.க.பா | 2 |
| | | பரந்தன் இந்து ம.வி | 3 |
| எழுத்தாக்கம் | ஜீ. டொறின் ஒலிவியா | இராமநாதபுரம் அ.த.க.பா | |
| | பிரிவு 3 | | |
| பேச்சு | பா. சங்காதிரன் | கிளிநொச்சி ம.வி | 1 |
| | ம. எலிஸ்ஏஞ்ஜெலின்ஸ் | கரியாலை நாகபடுவான் இல 2 | 2 |
| | க. தேனுகா | பிரமந்தனாறு அ.த.க.பா | 3 |
| எழுத்தாக்கம் சொல்வதெழுதல் | பே. சாமினி | சிவநகர் அ.த.க.பா | 1 |
| கட்டுரையாக்கம் | செ. சிவசங்கரி | அக்கராயன் அ.த.க.பா | 1 |
| | இ. மதுமிதா | புன்னை நீராவி அ.த.க.பா | 2 |
| | க. தயாழினி | கிராஞ்சி அ.த.க.பா | 3 |
| பா ஓதல் | த. தனுஷா | ஜெயபுரம் அ.த.க.பா | 1 |
| | சி. கமலரஞ்சினி | பிரமந்தனாறு ம.வி | 2 |
| குறட்பா அறிவு | குழு | முருகானந்தா ம.வி | 1 |
| | குழு | பரந்தன் இந்து ம.வி | 2 |
| | குழு | வேரவில் அ.த.க.பா | 3 |
| செந்நெறி இசை (தனி) | நி. தயாபரன் | பரந்தன் இந்து ம.வி | 1 |
| | யோ. அன்ரனிறொபின்சன் | கரியாலைநாக இல. 2 | 2 |
| | க. உஷாரங்கன் | புனித அந்தோனியார்றோ.க | 3 |
| செந்நெறி நடனம் (தனி) | ப. சபிதா | இந்துக் கல்லூரி | 1 |
| | மு. கோகிலராணி | கறுக்காய்த்தீவு அ.த.க.பா | 2 |
| | மா. ரம்யா | கண்டாவளை ம.வி | 3 |
| சித்திரம் கருத்து | யோ. தவேந்திரன் | ஜெயபுரம் அ.த.க.பா | 1 |
| | உ. ஜெயகாந்தன் | புனித அந்தோனியார் றோ.க | 2 |
| | த. பாலகுமார் | கனகாம்பிகைக்குளம் அ.த.க | 3 |

(மிகுதி அடுத்த இதழில் வெளியாகும்)

## துரத்தப்பட்ட மடுத் தேவாலய அகதிகள்

மடு இலங்கை கத்தோலிக்கர்களின் புனித யாத்திரைத் தலம் நேற்றுவரை எல்லாவற்றையும் இழந்துவிட்டு அகதிகளாக ஓடிவந்தவர்களை ஆதரித்த ஒரிடம். ஆலயங்களில் யுத்தத்தினால் பாதிக்கப்படும் மக்கள் தஞ்சமடைவது இயல்பாகும்.

ஏறக்குறைய எண்ணாயிரம் குடும்பங்கள் மடு ஆலயத்திலும் அதன் சுற்றுப்புறங்களிலும் தஞ்சமடைந்திருந்தனர். இவர்களுக்கான பராமரிப்பை அகதிகளுக்கான ஐக்கிய நாடுகளின் உயர் ஸ்தானிகராலயம் UNHCR இதுவரை காலமும் மேற்கொண்டுவந்தது. இப்பகுதி இராணுவக் கட்டுப்பாட்டுள் வருவதற்கு முன் இப்பகுதி ஆயுதங்களுடன் நடமாடுவதற்கு தடைசெய்யப்பட்ட பகுதியாக இருந்தது. இதனை விடுதலைப் புலிகள் ஒருபோதும் மீறியது கிடையாது. இதனாலேயே இராணுவத்தை இப்புனித பிரதேசத்தை விட்டு விலகுமாறு கோரி மதகுருமாரும், ஏனைய கத்தோலிக்கர்களும் உண்ணாவிரதமிருந்தனர். மடுத்தேவாலயம் கைப்பற்றப்பட்டதை ஒரு அரசியல் வியாபாரமாக மாற்றியது சிறீலங்கா அரசு. இது ஒருவகையில் பௌத்த சிங்கள பேரினவாத வெளிப்பாடு என்பதை சிங்களக்கிறீஸ்தவர்கள் விரைவில் புரிந்து கொள்வர்.

கொசோவாவின் அல்பேனிய அகதிகளுக்காக நேட்டோ குறிப்பாக அமெரிக்கா தலையிட்டுள்ளது. ஆனால் அதிலும் பார்க்க அதிகமாக அகதிகள் இலங்கை கிழக்கு ஆபிரிக்கா, ஒர்திகைதான், ஆப்கானிஸ்தான் போன்ற இடங்களில் பாதிக்கப்பட்ட போதிலும் நேட்டோவோ அன்றி ஐரோப்பிய அமெரிக்கசமூகமோ அக்கறைப்படவில்லை எனவும் கொசோவாவில் மட்டும் அதிக அக்கறை செலுத்தப்பட்டது எனும் கேள்வி தொடர்பாக புதிதாக விவாதங்கள் எழுந்துள்ளன என அமெரிக்க முன்னாள் வெளிவிவகார அமைச்சர் ஹென்றி ஏ. கிசிங்கர் தெரிவித்துள்ளார்.

அது மட்டுமல்ல கடந்த மாதம் இலண்டன் அலெக்சாந்திரியா பிளேஸில் நடைபெற்ற மகாநாடு ஒன்றில் கொசோவா அல்பேனியர்களின் நிலையை விட சிறீலங்காவில் ஈழத்தமிழர்கள் மிக மோசமாகப் பாதிக்கப்பட்டு வருவதும் சுட்டிக்காட்டப்பட்டது.

இதனைவிட ஏறக்குறைய இருவாரங்களுக்கு முன் கொசோவா அல்பேனியர்கள் தொடர்பான விவகாரங்களுக்கு பதிலளிக்கையில் ஐக்கிய நாடுகள் அமைப்பின் செயலாளர் நாயகம் திரு கோபி அன்னான் எது எப்படி இருந்தபோதும் அகதிகளுக்கான விடயங்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படவது தவிர்க்கப்படவியலாதது எனத் தெரிவித்திருந்தார். இவ்வாறான சர்வதேசக் கருத்தாடல்களின் மத்தியிலேயே கடந்த மாதம் 16ம் திகதி மடுத்தேவாலய அகதிகள் பலாத்காரமாக இடம் மாற்றப்பட்டார்கள்.

கடந்த மாதம் 16ம் திகதி அமைச்சர் ரத்வத்த மடுப் பகுதிக்கு திடீர் விஜயம் ஒன்றை மேற்கொண்டு அதிகாரிகள் மட்டத்திலான கூட்டம் ஒன்றை நடத்தியுள்ளார். இதனடிப்படையில் மடுத்தேவாலய அகதிகள் உடனடியாக இடமாற்றப்பட வேண்டும் எனவும் தெரிவிக்கப்பட்டதை அறிந்த மக்கள் தத்தமது இருப்பிடங்களுக்கு திருப்பி அனுப்பப்படுவதில் உள்ள கஷ்டங்களை சுட்டிக்காட்டி தம்மை தொடர்ந்தும் மடுத்தேவாலயப் பகுதியிலேயே தங்க அனுமதிக்கும்படியும் கோரி எதிர்ப்பு ஆர்ப்பாட்டப் பேரணி ஒன்றை நடத்தியுள்ளனர்.

சஞ்சிகா

எனினும் 6ம் திகதி காலை மன்னார், வவுனியா மாவட்டத்தின் உதவி அரசாங்க அதிபர்கள், பிரதேசச் செயலாளர்கள், கிராமசேவை அலுவலர்கள் அனைவரும் வந்து அகதிகளை அவர்களுக்குரிய இடங்களுக்கு பலவந்தமாக ஏற்றிச் சென்றுள்ளனர். ஏற்றிச்செல்லப்பட்ட இவர்களில் செட்டிகுள பகுதியை சேர்ந்த ஒருவர் தெரிவிக்கையில் தாம் ஏற்றிச் செல்லப்பட்ட செட்டிகுளத்தில் தமது குடிசையில் இறக்கி விடப்பட்ட போது தான் இருந்த இடத்துக்கு சென்றபோது அது தலைதுகாணி வீடின்றி காடாக இருந்ததாகவும் அன்றிரவை தாம் தமது அயலில் இருந்த நண்பர் ஒருவரின் வீட்டிலேயே கழித்ததாகவும், தொடர்ந்தும் தங்கி இருப்பதாகவும் தெரிவித்தார்.

இதே போன்று திருகோணமலையைச் சேர்ந்தவர்கள் வவுனியாவிலும் கிளிநொச்சி முல்லைத்தீவைச் சேர்ந்தவர்கள் பேசாலை, கருங்கண்டல் ஆகிய பகுதிகளுக்கும் மாற்றப்பட்டுள்ளனர். மடுத்தேவாலய அகதி முகாமும் யூ. என். எச். சீ ஆரினால்தான் பராமரிக்கப்பட்டு வந்தது என்பதை மீண்டும் நினைவுபடுத்துகிறேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாடறிவோம் நாம்:- (இந்தோனேசியா)

# இயற்கை வளமுடைய 13000 தீவுக் கூட்டங்கள்

தலைநகர் - ஜகார்த்தா
பரப்பு 1904, 569 ச.கி.மீ
மக்கள் தொகை - 1976 கோடி
மொழி - பஹாசா இந்தோனேசியன், டச்சு, ஆங்கிலம், ஜாவானிஸ்
சமயம் - இஸ்லாம், கிருத்தவம் இந்து, புத்தம்
நாணயம் - ருபியா
எழுத்தறிவு - 85%

13000 தீவுக் கூட்டங்கள் அடங்கிய இந்தோனேசியாவில் 6000 தீவுக் கூட்டங்களில் மக்கள் வசிக்கிறார்கள் ஆரம்ப காலங்களில் நெதர்லாந்து ஈஸ்ட் இண்டீஸ் எனப்பெயர் பெற்றிருந்தது 1942ல் ஜப்பான் ஆதிக்கம் செலுத்தயது 1945ல் தன்னைத்தானே சுதந்திரப் பிரகடனம் செய்தது 1949ல் நெதர்லாந்து தனி ஆட்சியுரிமையை வழங்கியது 1966ல் ஜெனரல் சுகர்தோ இராணுவப் புரட்சி மூலம் ஆட்சியைக் கைப்பற்றிக் கொண்டார் 1998வரை இவரது ஆட்சி நீடித்தது தற்போது மாணவர் புரட்சி மூலம் ஜெனரல் சுகார்த்தோவின் பதவிக் காலம் முடிவுக்கு வந்துள்ளது

தற்போதைய அதிபர்;-

உலகின் இயற்கை வளம் மிகுந்த நாடுகளுள் ஒன்று தகரம் எண்ணெய் பாக்சைட் செம்பு நிக்கல் தங்கம் வெள்ளி என்பன கணிசமான அளவு கிடைக்கின்றன விவசாயம் முக்கிய தொழில்

அந்நிய செலாவணி ஈட்டுவதில் வனப்பொருட்கள் முக்கிய பங்கு வகிக்கின்றன

## இயற்கைப் பேரிடர்கள் எமக்கு எதைப் புலப்படுத்துகின்றன

உலகம் முழுவதிலும் ஆண்டு தோறும் பலவாயிரம் காட்டுத் தீ விபத்துக்கள் ஏற்படுகின்றன இதனால் நகரங்களுக்கும், கிராமங்களுக்கும் பேரபாயம் ஏற்படுகின்றன இவற்றுள் பெரும்பாலானவை அனல் வீசும் வறண்ட கோடைகளினாலும் இடி மின்னல்களினாலும் ஏற்படுகின்றன மற்றவை நிலநடுக்கத்தினால் உண்டாகும் எரிமலைக் குமுறல்களினால் விபத்துக்கள் எரியூட்டுதல்காரணமாக உண்டாகின்றன இத்தகைய மிகப்பயங்கரமான காட்டுத் தீ விபத்து அண்மையில் 1987 மே 6 அன்று சீனாவில் கிங்கான் பெருமலைப் பகுதியில் ஏற்பட்டது கடுமையான காற்று வீசியதால் 20 நாட்கள் நீடித்த இந்த தீவிபத்தில் 10 இலட்சம் ஹெக்டர் பரப்பில் 759,000 கனமீட்டர் காடுகள் எரிந்துபோயின இது இந்த மண்டலத்தில் மொத்தக் காட்டுப்பகுதியில் 81% ஆகும் அல்லது இப்பகுதியில் 20% ஆகும் என்பது கவலைப்பட வேண்டிய விடயமாகும்.

## இந்தியாவில் 232 பல்கலைக்கழகங்கள்

இந்தியா முழுவதும் 232 பல்கலைக்கழகங்களும் பத்தாயிரம் கல்லூரிகளும் இருக்கின்றன என அண்மைப்புள்ளி விபரங்கள் தெரிவிக்கின்றன

## பன்னாட்டு பாராளுமன்றங்கள் சிலவற்றின் பெயர்கள்

| | |
|---|---|
| அயர்லாந்து - | டெய்ல் |
| அமெரிக்கா - | காங்கிரஸ் |
| ஆப்கானிஸ்தான் - | சோரா |
| ஆஸ்திரியா - | பெடரல் அசெம்பிளி |
| இங்கிலாந்து - | பிரபுக்கள் சபை<br>மக்கள் சபை |
| ஈரான் - | மஜ்ஜிலிஸ் |
| இஸ்ரேல் - | நெசட் |
| ஐஸ்லாந்து - | அல்திங் |
| கனடா - | மக்கள்சபை<br>செனட்சபை |
| சீனா - | தேசியமக்கள் காங்கிரஸ் |
| சுவீடன் - | ரிக்ஸ்டாக் |
| டென்மார்க் - | போல்கெட்டிங் |
| நேபாளம் - | தேசிய பஞ்சாயத்து |

## பொது விடுமுறைநாட்கள் சில நாடுகள் விபரம்

| | |
|---|---|
| இந்தியா | 17 |
| சுவிட்சர்லாந்து | 13 |
| அமெரிக்கா | 13 |
| நியூசிலாந்து | 12 |
| பெல்ஜியம் | 12 |
| பின்லாந்து | 11 |
| அவுஸ்திரேலியா | 10 |
| ஆஸ்திரியா | 10 |
| பிரான்சு | 10 |
| ஹாலந்து | 08 |
| பிரேசில் | 08 |
| பிரிட்டன் | 08 |
| சுவிடன் | 08 |

[உலகநாடுகள் பல வெவ்வேறு வகையில் (ஆண்டு) பொது விடுமுறை நாட்களை நடைமுறைப்படுத்திவருகின்றன.

### கண்டுபிடிப்புக்கள்

- செயற்கை இதயம் — 1957
  வில்லம் கோல்ட் நெதர்லாந்து
- டீசல் இயந்திரம் — 1895
  ருடோல்ஃப் டீசல் ஜெர்மனி
- நீர்மூழ்கிக்கப்பல் — 1776
  டேவிட்புஷ்னல் அமெரிக்கா
- கத்தி — 1787
  எம். லாமோன்ட் பிரான்சு
- இசைத்தட்டு — 1948
  டாக்டர் பீட்டர்கோல்ட் அமெரிக்கா
- ரப்பர் — 885
  ஜி. டெயிம்லர் பிரிட்டன்
- ஹெலிஹொப்டர் — 1924
  எதியன் சிக்மிசென் பிரான்சு
- ஹைட்ரசன் குண்டு — 1952
  எட்வேர்ட் டெல்லர் அமெரிக்கா

### அறிவுக்களம்

## கூட்டுறவு பற்றி அறிஞர்கள்

ஜோடுக்கும் இக்கொள்கையின் வழிகாட்டல்கள் சமுதாய ஏற்றத் தாழ்வுகளையும், சமூக அநீதிகளையும், சுரண்டலையும் ஒழித்து நீதியும் அறமுஞ்சார்ந்த பொதுநல சமுதாய அமைப்பொன்றை உருவாக்க வழிவகுக்கும் — றொபர்ட் ஓவன்

முதலாளித்துவ முறையில் கூட்டுறவு ஒன்றுதான் நல்ல அமைப்பு அதை எப்பாடுபட்டாவது அப்படியே கட்டிக்காக்க வேண்டும் — லெனின்

## OXFORD கரீபியன் ஆங்கில அகராதி

OXFORD கரீபியன் ஆங்கில வழக்காற்று அகராதி என்ற அற்புதநூலை பேராசிரியர் ரிச்சார்ட் ஆல்சோப்போ என்ற அறிஞர் தயாரித்துள்ளார்

ஆஃப்பிரிக்கர், சீனர் போர்த்துக்கேயர், செவ்விந்தியர் ஆகியோரின் பல்வேறு மொழிகளின் செல்வாக்குகள் பிரிட்டிஸ் ஆங்கிலத்தின் வெவ்வேறு வடிவங்கள் ஆகியவை இணைந்து கரீபியன் ஆங்கிலம் உருவாகியுள்ளது இது ஒரு அருமையான கலவை மொழி என்று பலரால் பாராட்டப்பட்டுள்ளது.

## ஒலிபரப்பு நாள்

உலகின் முதல் ஒலிபரப்பு 1920 ஆகஸ்ட் 27 அன்றுபியூனோஸ் அயர்ஸில் தொடங்கியது "LR8" என்ற பெயரில் ஒலிபரப்புத் தொடங்கிய நிலையம் இன்றுவரை செயற்பட்டு வருகின்றது இந்த முதல் ஒலிபரப்பு நினைவாகத்தான் பல நாடுகளில் ஆகஸ்ட் 27 உலக வானொலி நாளாக கொண்டாடப்பட்டு வருகிறது.

## சங்கமம் குறுக்கெழுத்துப் போட்டி இலக்கம் 10

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 |
| 8 | 9 | 10 | ■ | 12 | ■ | 14 |
| 15 | 16 | 17 | ■ | 19 | 20 | ■ |
| 22 | ■ | ■ | ■ | 26 | 27 | 28 |
| 29 | 30 | 31 | 32 | ■ | 34 | 35 |
| ■ | 37 | ■ | 39 | 40 | 41 | 42 |
| ■ | 44 | 45 | 46 | 47 | ■ | 49 |

### இடமிருந்து வலம்

1 மண்ணின் மைந்தர்களை நினைவுகூரும் தினம்
8 லெப் கேணல் நளாயினியுடன் கடலில் காவியமான பெண் கடற்கரும்புலி (குழம்பி வருகிறது)
15 நீர் தேக்கிவைத்து விவசாயம் செய்யப்படுவதை இப்படியும் அழைப்பர் (குழம்பி வருகிறது)
19 மூதலை என்று தொடங்கும் ஓர் ஊர் வன்னியில் இருக்கும் (ஓர் எழுத்து விடுபட்டுள்ளது)
30 விடுதலைப் புலிகளின் தொழில் நுட்பக் கல்லூரி இவரதுபெயரில் (குழம்பி வருகிறது)
35 தஞ்சை உட்கொண்டால் இது சம்பவிக்கும் (குழம்பி வருகிறது)

### மேலிருந்து கீழ்

4 வன்னியின் மையப்பகுதியில் இராணுவம் நிலைகொண்டுள்ள இடம்
5 ஓயாத அலைகள் 2 தாக்குதல் இவர் நினைவு தினத்தில் நடத்தப்பட்டது
14 சகோதரனை இப்படி அழைப்பர் ஓர் எழுத்து விடுபட்டு குழம்பி வருகிறது)
20 3ம் கட்ட ஈழப்போர் இந்த மாதத்தில் நடத்தப்பட்டது (குழம்பி வருகிறது)
28 தமிழீழ தேசியத்தலைவர் மேதகு திரு வே. பிரபாகரன் அவர்கள் முதலில் மக்கள் முன்தோன்றிய இடம்
30 தேரை இப்படியும் அழைப்பர் (குழம்பி வருகிறது)

சூ இரத்தினம்
தமிழீழ நிர்வாகசேவை, வவுனியா மாவட்டம். மல்லாவி.

முடிவு திகதி: 30 06-99

## பரீட்சைப்பெறுபேறுகள்

கிளிநொச்சி மாவட்ட கூட்டுறவு சபையினால் 1998 ஜூலை - அக்டோபர்காலப்பகுதிக்கு நடாத்தப்பட்ட கூட்டுறவு பணியாளர் தராதரப் பத்திர (கனிஷ்ட) பிரிவுப் பயிற்சி நெறியில் பயின்ற பயிற்சியாளர்களின் பரீட்சைப் பெறுபேறு வடக்கு கிழக்கு மாகாண கூட்டுறவுக் கல்லூரியால் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது அதன் விபரம் வருமாறு:

| | | |
|---|---|---|
| 1ம் பிரிவில் சித்திபெற்றோர் | — | இல்லை |
| 2ம் பிரிவில் சித்தி பெற்றோர் | — | 10 |
| 3ம் பிரிவில் சித்தி பெற்றோர் | — | 22 |
| சாதா சித்தி பெற்றோர் | — | 16 |
| சித்தியின்மை பெற்றோர் | — | 05 |

2ம் பிரிவில் சித்தி பெற்றோர் விபரம்

| | | |
|---|---|---|
| 1 | அ பிரபாகரன் | 2ஏ, 2பி, சி |
| 2 | ம சுரேஸ்குமார் | 2ஏ, 2பி, சி |
| 3. | ம மகாலிங்கம் | ஏ, 3பி, சி |
| 4 | சி சிவராம் | ஏ 3பி, சி |
| 5 | வே, வில்மதாஸ் | ஏ 3பி, சி |
| 6 | க சித்திரபானு | ஏ, 2பி, 2சி |
| 7. | தி. செந்தூர்நாதன் | ஏ, 2பி 2சி |
| 8. | அ. றஜிகலா | ஏ, பி, 3சி |
| 9. | கு அருட்குமரன் | ஏ பி, 3சி |
| 10. | செ, செல்வநாதன் | 3பி, 2சி |

53 பயிற்சியாளர்கள் பரீட்சைக்கு தோற்றி 48 பேர் சித்தியடைந்துள்ளமை குறிப்பிடத்தக்கதாகும் என கிளி மாவட்ட கூட்டுறவுச்சபை செயலாளர் தெரிவித்துள்ளார்

## எயிட்ஸ் நோய்க்கு மூலிகைமருந்து கண்டுபிடிப்பு!

தமிழ்நாடு வேலூர் மாவட்டத்தில் இயங்கி வரும் டாக்டர் அக்பர் கவுஸரின் எயிட்ஸ் தடுப்பு மையத்தில் எயிட்ஸ் நோயாளிகள் இருவருக்கு சிகிச்சை அளிக்கப்பட்டுள்ளன் தன் பின்னர் ஆரோக்கியமாக இருப்பதாக கூறப்படுகிறது.

இன்னும் இரண்டு ஆண்டுகளில் விஞ்ஞான பூர்வமாக ஆய்வு செய்து எயிட்ஸ் நோய்க்கான மூலிகை மருந்துகளின் மருத்துவ அறிக்கை கிடைக்குமென டாக்டர் அக்பர் கவுஸர் தெரிவிக்கின்றார்

இவரது மூலிகை மருத்துவ மனையில் ஒரு மூலிகை உலகமே இருப்பதாக தெரிவிக்கப்படுகிறது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொதி சுமக்கும் தொழிலாளி பாலனுடன் நேர்முகம் காணல்

**நேர்முகம் கண்டவர் - கலி**

**''கடின உழைப்பு, நம்பிக்கை; விடாமுயற்சி துணிவு இவை இருந்தால் வாழ்க்கையில் உயரலாம் என்கிறார்''**

பழக இனிமை, பொறுத்துக்கொள்ளும் 'சுபாவம்,' தன் குடும்பத்தினரின் வாழ்வுக்காக தளராத உழைப்பு சங்க நலனில் அக்கறை பல இடப்பெயர்வுகளுக்கு மத்தியில் நின்று சங்கப் பொருட்களை மீட்பதில் உதவியவர் என்று சங்கத்தால் பாராட்டப்பட்ட 44 வயதுடைய பொதிசுமக்கும் தொழிலாளி த. பால சுப்பிரமணியம் அவர்களை சங்கமம் [பத்திரிகைக்காக] நேர்முகம் கண்டேன்,

முழங்காவில் கிளி புங்குடுதீவு நயினாதீவு ப நோ. கூட்டுறவுச் சங்கத்தில் பணிபுரிந்து கொண்டிருந்த வேளை சங்க வளாகத்தில் சந்தித்தேன்

கலி: வணக்கம் பாலசுப்பிரமணியம் அவர்களே!

பால :- வணக்கம் ஐயா

கலி: உங்களை சங்கமம் பத்திரிகைக்காக பேட்டி எடுக்க வந்திருக்கிறேன்.

பால :- மிகவும் நல்லது

● உங்களைப்பற்றிய ஓர் அறிமுகத்தை வாசகர்களுக்கு சொல்லமுடியுமா?

● ஆம் அதுக்குத் தானே வந்திருக்கிறீங்க! நிறைய சொல்றன.

புங்குடுதீவு என்ர சொந்த இடம் புங்குடுதீவு றோ. க வித்தியாலயத்தில் ஆரம்பக் கல்வியை பயின்றதன் பின்னர் 6ம் வகுப்பு வரை மகா வித்தியாலயத்தில் படித்து வந்தேன் எனக்கு படிப்பு கொஞ்சம் மட்டு தான் இப்ப எனக்கு பட்டினத்தார் கதைதான் ஞாபகம் வருகிறது.

தவிச்சுத் திரிந்த வேளையிலே என் துடுக்கடக்கி பள்ளிக்கு அனுப்பி வைத்திலனே என் தந்தையாகிய ஏதவனே என்றார்,

படிக்காத முறையை நான் இப்ப உணர்கிறேன்

25 வருடங்களுக்கு மேலாக ஒரு பொதிசுமக்கும் தொழிலாளியாக காலத்தை ஓட்டி விட்டேன்.

73, 75ம் ஆண்டு காலப் பகுதியில் தீவுப்பகுதி பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தில் எனது ஆரம்பத் தொழிலை துவங்கி புங்குடுதீவு நயினாதீவு சங்கம் தனியாக 77ம் ஆண்டு பிரிந்த காலந் தொட்டு இன்றுவரை பொதி சுமக்கும் தொழிலாளியாக சங்கத்தில் பணிபுரிகிறேன்

● ஆரம்ப கால நிலைக்கும் இப்போதைய நிலைக்கும் தொழில் நிலையில் என்ன வேறுபாடுகளை காணுகிறீர்கள்?

● அப்ப 100Kg மூடையை தனியச் சுமப்பன் இப்ப 50Kg மூடையை சுமக்க கஷ்டமாக இருக்கு (சிரித்துக் கொண்டே) எல்லாமே மாறிப் போயிட்டுது.

அப்ப ஒருநாளைக்கு கூலி பத்து ரூபா கிடைக்கும் ஒரு நாளைய வாழ்க்கையை ஓட்டிவிடலாம் இப்ப 00/- 50/- கிடைக்கும் 1 லீட்டர் மண்ணெண்ணெய் வாங்கப்பத்தாது இப்ப யாவரண்டாலும் ஒரு தொழிலைச் செய்து குடும்பத்தை நடத்த முடியாது வாழ்க்கைச் செலவு அப்படியிருக்கு

● பொதி சுமக்கும் தொழிலாளி ஒருவர் வாழ்க்கையில் முன்னேற முடியாதா?

● ஏன் முடியாது! சிக்கனமாக வாழப் பழக வேணும், குடி வெறி இருக்கக் கூடாது தகாத காரியங்களை தவிர்த்து கடினமாக உழைத்துப் பாருங்க முன்னேற்றம் காணலாம

● உங்களைப்போன்ற தொழிலாளிகளுக்கு என்ன கூற நினைக்கிறீங்க?

● நாங்க உடம்பால வேலை செய்யுறம். அதனால நல்லாச் சாப்பிட்டு உடம்பைக் கவனமாக வைத்திருக்க வேண்டும், வீட்டில கஷ்டப்பெண்டு சாப்பிடாம இருந்தா வயதான காலத்தில கஷ்டப்பட வேண்டியிருக்கும்.

அது மட்டுமல்ல வேலை செய்யிற இடத்தில நேர்மையாக நடக்கணும், சுறுசுறுப்பாக உழைக்கணும் இதைத்தான் இருபத்தைந்து வருசமாகச் செய்யுறன். எனக்கொரு குறையுமில்ல.

● இந்தத் தொழில் ஊடாக எதை எதிர்பார்க்கிறீங்க?

● கஸ்டப்பட்டு வேலை செய்கிறம் கைநிறையச் சம்பளமில்லை? என்பது கவலைதான் ஏதோ எங்களுக்காவது வேலைக்கேற்ற கூலி கிடைக்க வேண்டும் இது விடயத்தில் எல்லோரும் கொஞ்சம் எங்களை கருணையோடு பார்க்கவேணும் அதுதான் எங்க எதிர்பார்ப்பு

● உங்க வாழ்க்கையில் ஏதாவது மறக்கமுடியாத அனுபவம் ஏதும் உண்டா?

● ஒன்றா, இரண்டா எத்தனையோ உண்டு ஆனால் இதைமட்டும் என்னால் மறக்க முடியவில்லை

குறிகட்டுவான் துறைமுகத்தில் இருந்து நயினாதீவுக்கு பொருட்களை சங்கம் கொண்டு செல்லும் அவ்வேளைகளில் நானும் போவதுண்டு!

ஒருநாள் நயினாதீவு ஜெட்டியில் நின்ற கடற்படையினர் L.T.T.Eயை பார்த்தனீ ா என்றுஎன்னைக் கேட்டார்கள் என் போதாத காலம் காணவில்லை என்று கூறிவிட்டேன்

அவ்வளவுதான் 4மணிக்கு L T T,E வாறது போறது எங்கட பைனாஸ்கோப் குழலால பார்க்கிறது பச்சைப் பிள்ளையைக் கேட்டாக்கூட சொல்லும் நீ பொய் சொல்லுறது அப்ப நீ L. T. T. Eக்கு சப்போட்டு என்று சொல்லி என்னைப் போட்டு வாங்கு வாங்கென்று வாங்கிவிட்டார்கள் தலைகீழாக தொங்கவிட்டார்கள் ஏதோ திரும்பி வந்துவிட்டேன்

நயினாதீவு மக்களுக்கு சாமான் இறக்கப்போனதால இந்தக்கதி எனக்கு இப்ப நினைச்சாலும் அதை மறக்க முடியாது

● வகுப்பு தொழில் என்ற தாழ்வு மனப்பான்மை உங்களை வாட்டவில்லையா?

● தொழில் என்று வந்துவிட்டால் எல்லாம ஒன்றுதான் செய்யும் தொழிலே தெய்வம் மற்றவர்கள் மதிக்கும்படியா நடந்து கொண்டால் அதுதான் உயர்வைத் தரும்.

● இப்போது எங்கு வசிக்கிறீர்கள்? இறுதிக்கால இலட்சியம் ஏதும் உண்டா?

● 91ம் ஆண்டு வரைவிட்டு வந்தம் யாழ்ப்பாணம், கிளாலி கிளிநொச்சி என்று தாண்டி இப்ப முழங்காவிலில் தங்கி இளைப்பாறுகிறம் நான்கு பிள்ளைகள் உண்டு இவர்களைப் படிப்பித்து நல்லாக்க வேண்டுமென்பது என் ஆசை

93ம் ஆண்டுவரை நாளாந்தம் கூலிக்கு வேலை செய்தனான் இப்ப என்ர சேவையை மதித்து சங்கத்தில் நிரந்தர பொதிசுமக்கும் தொழிலாளியாக அமர்த்தி இருக்கிறார்கள் நானும் சங்கத்திற்கு விசுவாசமாக உழைக்கிறன்

● இறுதியாக உங்களுக்கு இந்தத் தொழிலில் மன நிம்மதி ஏற்பட்டதுண்டா?

● ஆம் உண்மையானமன நிறைவு அரசாங்கத்தின்ர இராணுவத்தின்ர கெடுபிடிக்குள் மத்தியில் ஊரடங்கு, குண்டுவீச்சு செல்லடி துப்பாக்கிச்சூடு போன்றவற்றுக்கு மத்தியிலும் நின்று பொருட்களை ஏற்றி இறக்கி மக்களுக்கு நிவாரணமளிப்பதில் துணிந்து செயற்பட்டிருக்கிறேன்

இராணுவம் முன்னேறி எமது இடங்களை ஆக்கிரமித்து வரும் வேளையில் கூட துணிந்துநின்று பொருட்களை வேறு இடங்களுக்கு மாற்றுவதற்கு உயிரை பணயம் வைத்து வேலை செய்திருக்கிறேன் இதெல்லாம் எங்களுக்கு திருப்திதான் இதைவிட ஒருவனுக்கு வேறு என்ன வேணும்?

● சங்கமம் வாசகர்களுக்கு என்ன சொல்ல விரும்புகிறீர்கள்?

● உங்களுக்கு தேவை கடின உழைப்பு, நம்பிக்கை, துணிச்சல், விடாமுயற்சி இது இருந்தால் நாம் நினைத்தது நடக்கும்

## செய்தியாளர் பயிலுநர்

சங்கமச் செய்தியாளர் பயிலுநராக பயிற்சிபெற விரும்பும் கூட்டுறவுப் பணியாளர் மற்றும் தனிநபர்கள் சங்கம அலுவலகத்துக்கு உடன் விண்ணப்பிக்கவும்

ஆசிரியர்

---

**திங்கள் ஓர் அறிமுகம்**

# கிளி/ விதை உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கம் லி-து

யுத்தம் பொருளாதாரத் தடை என்பவற்றின் காரணமாக எரிபொருள் பசளை விவசாய இரசாயனங்கள் என்பனவற்றின் விநியோகம் எமது பகுதிகளில் சீர்குலைந்திருந்தது இதனால் விவசாய உற்பத்தி வெகுவும்பாதிப்படைந்த நிலை எமது மாவட்டத்தில் ஏற்பட்டது

இந்நிலையில் மாற்று வழிகளை ஆராயும் தேடும் நிலை உருவானதால் குறைந்தளவு பசளைப் பிரயோகம் ஆய நிகை முறையிலான பீடை கட்டுப்பாட்டு முகாமைத்துவம் என்பவற்றுடன் எமது பகுதிகளுக்கு பொருத்தமான சிறந்த விளைச்சலைத் தரக் கூடிய நெல் இனங்களை தெரிவு செய்து அவற்றை அதிக அளவில் உற்பத்தி செய்து விவசாயிகளுக்கு விநியோகம் செய்வதன் மூலம் விவசாய உற்பத்தியை அதிகரிக்க முடியும் எனும் கருதுகோளின் 1996 இல் செயர் சர்வதேச நிறுவனமும் கிளிமாவட்டத்தில் உள்ள கரைச்சி தெற்கு ப. நோ கூ சங்கமும் அக்கராயன் ப நோ. கூ சங்கமும் பூநகரி ப நோ. கூ. சங்கமும் இணைந்து முன்னோடித் திட்டத்தை ஆரம்பித்தன இதனடிப்படையில் தேர்வு செய்யப்பட்ட விவசாயிகள் மூலம் அக்கராயன் கரைச்சி தெற்கு ஆகிய ப. நோ கூ. சங்கங்கள் நெல் உற்பத்தியிலும் பூநகரி ப. நோ. கூ. சங்கம் சிறுதானியம், மரக்கறி விதைஉற்பத்தி என்பவற்றிலும் ஈடுபட்டன இச் செயற்பாட்டிற்கு விவசாயத்திணைக்களமும் அதன் உத்தியோகத்தர்கள் மூலம் பேராதரவினை வழங்கியது

28-08 98 இல் இது ஒரு தனித்துவமான சங்கமாக கூட்டுறவுப் பதிவாளரினால் பதிவுசெய்யப்பட்டது இதன் பிரதான நோக்கங்களாக தரமான விதை உற்பத்தியை ஏற்படுத்துதலும் சிறந்ததும் பொருத்தமானதுமான விதை இனங்களைத் தருவித்து விநியோகிப்பதும். விதை சுத்திகரிப்பு மற்றும் தெரிவு என்பவற்றிற்கான பயிற்சிகளை வழங்குவதுடன் விதை உற்பத்தியில் ஈடுபடும்போது அதனை மேற்பார்வை செய்வதுமாகும்.

இதனைவிட எமது விதை உற்பத்தியாளரும் அங்கத்தவர்களும் வெறுமனே மரமுறைசார்ந்த உற்பத்தி முறைகளுள் மட்டுமே முடங்கிக்கிடக்காது எமது நெருக்கடி வேளைகளிலும் உற்பத்திப் பொருட்களுக்கான தட்டுப்பாட்டினுள்ளும தாக்குப்பிடித்து அதிக விளைச்சலைப் பெறக்கூடிய பொருத்தமான (Apropriate technology) விவசாயத் தொழில்நுட்ப முறைகளைப் பிரயோகிக்க பயிற்சிகள் சிறு முகாமைத்துவ பயிற்சிகள் என்பவற்றை வழங்குவதினூடாக அவர்களை அபிவிருத்தி நோக்கில் சுயமாக ஆராயும் இயல்புடையவர்களாக மாற்றுதலே எமது தலையாய இலக்காகும்.

இந்த நோக்கிலே ஆரம்ப காலம் முதலே நாம் நமது அங்கத்தவர்கள் பலரும் அனுராதபுரம், வவுனியா, மன்னார் போன்றஇடங்களில் நடத்தப்பட்ட பயிற்சி செய

(8-ம் பக்கம் பார்க்க)

> கிளிநொச்சி விதை உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கத்தின்தலைவர்திரு திருநாவுக்கரசு கிருபாகரன், செயலாளர் திரு இளையகுட்டி சுந்தரலிங்கம் ஆகியோருடன் ஆசிரியர் அ. அ நேர்கண்டு எழுதியவை

---

# கூட்டுறவாளர் தின சிறப்பு மலர் - 1999

எதிர்வரும் 77 ஆவது அனைத்துலக கூட்டுறவாளர் தினத்தை முன்னிட்டு 99 யூலை மாத சங்கமம்' கூட்டுறவுதினச்சிறப்பிதழாக வெளிவருகிறது. இது தொடர்பாக பின்வரும் போட்டிகள் சங்கமத்தினால் நடத்தப்படவுள்ளது.

பொது

1. கவிதை

(25 வரிகளுக்கு மேற்படாமல் இருக்க வேண்டும்

2. சிறுகதை

3. கூட்டுறவினூடு அபிவிருத்தி எனும் பொருள்படும் கட்டுரை

(600 சொற்களுக்கு மேற்படாமல் இருத்தல் வேண்டும்)

4 சங்கமம் பொது அறிவுப் போட்டி-

(இதுவரை வெளிவந்த சங்கமப் பத்திரிகையில் வெளியாகிய விடயங்களை உள்ளடக்கியதாக அமையும்)

போட்டித்திகதி பின்னர் அறிவிக்கப்படும் பெயர்களை 'சங்கமம்' அலுவலகத்தில் பதிவு செய்யவும்)

மாணவர்க்கானது,

1 பேச்சுப்போட்டி

பிரிவு 1 (ஆண்டு 1-5 வரை)

பிரிவு 2 (ஆண்டு 6, 7, 8)

பிரிவு 3 (ஆண்டு 9, 10, 11)

பிரிவு 4 (ஆண்டு 12, 13)

பாடசாலை அதிபர்கள் பெயர்களை சங்கமம் அலுவலகத்தில் பதிவு செய்யவும்

2 கட்டுரைப் போட்டி

எமது தேசத்தைக் கட்டி வளர்ப்பது கூட்டுறவு எனும் பொருளில கட்டுரை அமைய வேண்டும்.

3. மாணவர்க்கான சங்கமம் பொது அறிவுப் போட்டி

இதுவரை வெளிவந்த சங்கமம் பத்திரிகைகளை அடிப்படையாகக் கொண்டது)

நிபந்தனைகள்

1 எமது பிராந்திய கலை பண்பாட்டுப் பின்னணியை கொண்டவையாக படைப்புகள் அமையவேண்டும்

2 தமிழீழ தேசிய விடுதலைப் போராட்டத்துக்கு எதிரான கருத்துக்களையோ, கூட்டுறவுக் கொள்கைகளுக்கு முரணான கருத்துக்களையோ படைப்புக்கள் கொண்டிருக்கக் கூடாது.

படைப்புக்கள் வந்தடைய வேண்டிய இறுதித் திகதி 30 06-99

ஆசிரியர்குழு
சங்கமம்
கந்தபுரம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சங்கமம்
SANGAMAM

ஊறு 2 அருவி 9
ஸ்கந்தபுரம், கிளிநொச்சி. மே 1999

## வவுனியாவில் காத்துக்கிடக்கும் தொடரணி பார ஊர்திகள்

கூட்டுறவின் வடபகுதி வரலாறு மிகவும் பிரசித்தமானது இலங்கையின் ஏனைய பகுதிகளில் கூட்டுறவு நலிவடைந்திருந்த வேளையிலும் வடபகுதியில் கூட்டுறவு வலுவான கட்டுக்கோப்புக்களைக் கொண்டிருந்தது இது வடபகுதி கூட்டுறவாளர்களுக்கு பெருமை பேசும் விடயமாகவிருந்தது.

இன்னும் இது தொடர்கிறது —

நம் தேசம் கூட்டுறவிடம் நிறைய எதிர்பார்க்கிறது போருக்குள் சிக்குண்ட மக்கள் கூட்டுறவு நிழலில் நின்று இளைப்பாற விரும்புகிறார்கள்

ஆனால் இவையெல்லாம் சிறிலங்கா அரசின் அழுத்தங்கள் இராணுவத்தின் தாக்குதல்களால் கேள்விக் குறியாகியுள்ளன?

சிறந்த செயற்பாடொன்றை மக்களுக்கு வழங்க முடியாமல் கண்ணீர் வடிக்கின்றன!

இங்கு பல்வேறு வகையான கூட்டுறவுச் சங்கங்கள் இயங்கி வருகின்றன ஒவ்வொன்றும் ஒவ்வொரு விதமான தொழிற்பாடுகளைக் கொண்டிருக்கின்றன

ஒவ்வொன்றுக்கும் வெவ்வேறு விதமான நெருக்கடிகள் இருந்து வருகின்றன ஆயினும் தற்போது பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களே கூடும் பாதிப்புக்குள்ளாகியுள்ளன என்று சங்க வட்டாரங்கள் சுட்டிக்காட்டியுள்ளன,

இராணுவ ஆக்கிரமிப்புக்கள் காரணமாக கூட்டுறவுச் சங்கங்கள் தங்கள் தொழிற்பரப்புக்களை விட்டு இடம் பெயரும் வேளையில் கோடிக்கணக்கான அசையும் அசையாச் சொத்துக்கள் அழிக்கப்பட்டுள்ளன இதற்கான நஸ்ட ஈடு இன்றுவரை அரசினால் வழங்கப்படவில்லை அப்படியிருந்தும் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் தங்கள் திறமையினால் வடபகுதிக்கு வெளியில் இருந்து நுகர்ச்சிப் பொருட்களை கொண்டு வந்து விநியோகம் செய்து தங்கள் செலவீனங்களை ஈடுசெய்து வந்தன அதற்கும் இன்று பெரும் தடைகள் ஏற்பட்டுள்ளன.

பாதிப்புக்கான நஸ்ட ஈடு தரவும் அரசு தயாரில்லை அதேவேளை கூட்டுறவுச் சங்கங்கள் வடபகுதிக்கு வெளியில் இருந்து நுகர்ச்சிப் பொருட்கள் கொண்டு வந்து விநியோகம் செய்ய அனுமதிப்பதற்கும் அரசு தயக்கம் காட்டுகிறது அதே வேளை இடம் பெயர்ந்த மக்களுக்கு நிவாரணம் வழங்குவதையும் அரசு இழுத்தடிப்புச் செய்கிறது முழுமையான நிவாரணமும் மக்களுக்கு கிடைப்பதில்லை நிவாரணம் வழங்கும் பணிகளை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களே கவனித்து வந்தன அரசின் திட்டமிட்ட நிவாரண வெட்டினால் இவை கணிசமாக பாதிப்படைந்துள்ளன

தற்போதைய சிறிலங்கா அரசின் இராணுவ பொருளாதார அழுத்தங்களின் இரும்புப்பிடிக்குள் சிக்குண்டுள்ள கூட்டுறவுச் சங்கங்கள் தங்களை தற்காத்துக் கொள்ள கடும் பிரயத்தனம் செய்ய வேண்டிய நிலைக்கு தள்ளப்பட்டுள்ளது

தற்போது நிதிநெருக்கடியினால் கொள்வனவு சக்திகளை இழந்துள்ள கூட்டுறவுச் சங்கங்கள் போரின் காரணமாக பல தனியார் நிறுவனங்கள் தங்கள் தொழில் களங்களை மூடிவரும் வேளையில் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களே மக்களின் பல்வேறு தேவைகளை நிறைவேற்றி வந்துள்ளன மக்களின் தேவைகளை நன்கறிந்து செயல்படக் கூடிய விதத்தில் பல புதிய பணியாளர்களை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் உருவாக்கியுள்ளன?

தற்போது அரசின் கட்டமிட்ட இராணுவ நெருக்கடிகள் காரணமாக பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் நஷ்டமடைந்து வருகின்றன. இதனால கூட்டுறவுப் பணியாளர்களின் பதவி நிலை கவலைக்குரியதாகியுள்ளது

தங்கள் இயல்பு நிலைக்கேற்றவாறு தங்கள் கொள்வனவை மேற்கொள்ள வவுனியா சென்ற கூட்டுறவுச் சங்கங்கள் இராணுவ அனுமதிகள் கிடைக்காமல் காத்துக்கிடக்கின்றன என்பது மிகவும் கவலைக்குரிய செய்தியாகும்.

கடந்த காலங்களில் வாரத்தில் ஐந்து நாட்கள் அரச அதிபரின் வாகன தொடரணி சேவைகள் நடைபெற்றன அப்போது நாளொன்றுக்கு ஐம்பது பார ஊர்திகள் வரை வந்தன ஆனால் இன்று வாரத்தில் மூன்று நாட்கள் தொடரணி அதிலும் 20 பாரஊர்திகளுக்கு மட்டும் தான் அனுமதி இது மேலும் விசனத்துக்குரிய விடயமாக இருக்கின்றது

இதனால் வவுனியாவில் இருந்து வன்னிக்கு வரும் அரச அதிபரின் தொடரணியூடாக வரும் செயலக புனர்வாழ்வுப்பகுதிக்கு வரும நிவாரணப் பொருட்களும் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களின் நுகர்ச்சிப் பொருட்களும், மண்ணெண்ணெயும் வவுனியாவில மாதக் கணக்கில் காத்துக் கிடக்கின்றன

அரசு இதுபற்றி சிந்திக்க வேண்டும் அரசு தமிழ் மக்கள் மீது இவ்வாறான பொருளாதார அழுத்தங்களைப் பிரயோகிப்பதை நிறுத்த வேண்டும் போரினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு மனிதாபிமான ரீதியில் உதவ முன்வர வேண்டும் அரசு தீர்க்கமான முடிவெடுத்து நாளாந்தம் மட்டுப்படுத்தப்பட்ட அரச அதிபரின் வாகன தொடரணி சேவைகள் இடம்பெறச் செய்வது பயனுள்ள நடவடிக்கையாக கருதக முடியும் என வன்னி பெருநிலப்பரப்பிலுள்ள கூட்டுறவாளர்கள் எதிர்பார்க்கின்றார்கள் இதுவே கூட்டுறவுக் குரலாகவும் ஒலிக்கிறது

## புதிய கிளை திறப்பு

இராணுவ ஆக்கிரமிப்புக்களினால முத்துஐயன்கட்டுப் பகுதியில் இருந்து இடம்பெயர்ந்து கைவேலிப் பகுதியில் குடியேறிய மக்களின் தேவைகளைக் கருத்தில் கொண்டு கைவேலியில் நுகர்ச்சி விற்பனை நிலையம் ஒன்றினை திறக்க முத்துஐயன் கட்டு ப நோ கூ சங்கம் நடவடிக்கை எடுக்கப்பட்டுவருவதாக தெரிய வருகிறது

(க)

## காரியாலயம் அமைக்க ஏற்பாடு

விசுவமடுக்குளம் பனை தென்னைவள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம் தலைமைக் காரியாலயம் அமைப்பதற்காக முல்லைச்சாலை 10ம் கட்டைப் பகுதியில் ஒரு ஏக்கர் காணியை கொள்வனவு செய்து தலைமைக் காரியாலயம் அமைக்கும் முயற்சியில் ஈடுபட்டுள்ளது என சங்க பொது முகாமையாளர் இ. பத்சிங் தெரிவித்துளளார்

## உள்ளீடுகள் வழங்கி வருகின்றன!

சிவில இராணுவ நடவடிக்கையினால் தம் விவசாய நிலங்களை இழந்துள்ள முத்துஐயன்கட்டு பகுதிவாழ் மக்கள் இடம்பெயர்ந்த நிலையிலும் தம் மனம் தளர்ந்துவிடாது பெருமுறிப்பு வெளியிலும், இடது கரையிலும் 1400 ஏக்கர் நிலத்தில் சிறுபோக நெற்செய்கையில் ஈடுபட்டுள்ளனர்

இவ் விவசாயிகளுக்கு தேவையான உள்ளீடுகளை முத்துஐயன்கட்டு பல நோக்குக் கூட்டுறவுச்சங்கம் வழங்கி வருகின்றது (க)

---

திங்கள் லமர்வுகளுக்கு சென்று வந்துள்ளோம் எமது அங்கத்தவர்களான திரு சந்தலிங்கம் திரு, கணபதிப்பிள்ளை ஆகியோர் விதை உற்பத்தி பண்ணை முறைகளை பற்றிய அனுபவப் பகிர்விற்காக தாய்லாந்தில் இருவார சுற்றுப் பயண அனுபவத்தைப் பெற்றுள்ளனர்.

உண்மையில் இன்று பல்வேறு வகையான நெருக்கடிகளுக்கு மத்தியிலும் பயிர்ச் செய்கை பண்ணப்பட்ட நிலங்களின் அளவுகள் குறைந்துள்ளபோதும். பசளை. எரிபொருள் தட்டுப்பாட்டின் மத்தியிலும் எமது மாவட்டத்துக்கு தேவையான நெல் எமது மாவட்டத்திலேயே உற்பத்தி செய்யப்படுகின்றமையை காண்கின்றோம்.

வரையறை செய்யப்பட்ட அங்கத்தவர்களுடன் 400 500) செயற்படும்சங்கமானது இன்று பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களான கரைச்சி தெற்கு கரைச்சி கிழக்கு அக்கராயன் பூநகரிஎன்பவற்றினூடாகவேஎமதுசெயல் திட்டங்களை மேற்கொண்டு வருகின்றோம்

தற்போது எமது விற்பனை நிலையத்தில் தருவிக்கப்பட்ட புதிய நெல் இனங்கள AT 303 b.G 800 (சம்பா வகையைச் சார்ந்தது (மற்றும் கோப்பிக்கன்றுகள மரக்கறி, குரக்கன். சணல் விதைகள் விற்பனை செய்யப்படுவதுடன், தென்னை நாற்று மேடை ஒன்றும் இடப்பட்டுள்ளது இவ்வாறு தரமான விதையினங்களை வழங்குவதோடு விவசாய விளைவுப் பெருக்கத்தைஏற்படுத்துவதே எமது நோக்கமாகும்.

## ஊர்காவற்றுறை ப.நோ.கூ. சங்கம் 11 ஏக்கரில் சிறுபோகம்

கிளி ஊர்காவற்றுறை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் 11 ஏக்கரில் சிறுபோக நெற்செய்கையில் ஈடுபட்டுள்ளது

வடபகுதிக்கு வெளியில் இருந்து நுகர்ச்சிப் பொருட்களை கொண்டு வந்து விநியோகிப்பதில் சிறிலங்கா அரசின் கெடுபிடிகள் அதிகரித்து வருவதால் கொள்வனவுச் சக்திகளை இழந்துள்ள சங்கங்கள் நுகர்ச்சி விற்பனையை மட்டும் சங்கத்தை நடாத்த முடியாதுள்ள நிலை தோன்றியுள்ளது. இதைக் கருத்தில் கொண்டுதான் விவசாய நடவடிக்கைகளை ஆரம்பித்துள்ளதாகவும் இதன் முதற்கட்டமாக 11 ஏக்கரில் சிறுபோகச் செய்கையை தொடங்கியுள்ளதாக சங்கத் தலைவர் திரு. சுந்தரலிங்கம் தெரிவித்துள்ளார், (க)

## பனைவேலை பயிற்சிகள் கண்டாவளையில் ஆரம்பம்

கண்டாவளை பிரதேச செயலர் பிரிவில் கரைச்சி வடக்கு அபிவிருத்தி நிறுவனமும் கிளிநொச்சி பனை அபிவிருத்தி சபையும் இணைந்து பனை வேலை பயிற்சி நெறியினை ஆரம்பித்து வைத்துள்ளது.

அண்மையில் கண்டாவளை பிரதேச செயலர் க. மதிநாகி இந்நிகழ்வினை ஆரம்பித்து வைத்தார்

இளம் பெண்கள் இப் பயிற்சியினைபெற்றுக் கொள்வதன் மூலம் எதிர்காலத்தில் பனம் பொருட்களின் பயன்பாட்டினை அதிகரிக்கச் செய்து சந்தை வாய்ப்புக்களை ஏற்படுத்திக் கொள்ளலாம் என கிளி பனை அபிவிருத்திச் சபை இணைப்பாளர் ஏவி கே மாணிக்கம் கருத்துத் தெரிவித்துள்ளார். (க)

## புதுக்குடியிருப்பு சங்கம் நெறியாளர்குழு தெரிவு

புதுக்குடியிருப்பு பலநோக்குக் கூட்டுறவுச்சங்க பொதுச் சபைக் கூட்டம் கடந்த 22 5-99 அன்று முல்லைமாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் தி சபாரத்தினம தலைமையில் நடைபெற்றது அவ்வேளை புதிய நெறியாளர்குழுத் தேர்தலும் இடம்பெற்றது.

பின்வருவோர் நெறியாளர் குழு உறுப்பினர்களாக தெரிவு செய்யப்பட்டனர்

கிரகோரி துரைரத்தினம் (தலைவர்)
க பூபதிராசா (உபதலைவர்)
தா தியாகராசா
ஐ துரைச்சாமி
சி சிவசிதம்பரம்
த.சிவதாஸ்
ச. சபாரட்ணம்
ஆகியோருடன் இரு மகளிரும் தெரிவாகினர் (க)

## உணவக சேவை

முல்லை காரைநகர் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் வற்றாப்பளை அம்மன் கோயில் பொங்கல் திருவிழாவை முன்னிட்டு அங்கு திரண்டுவரும் பக்தர்களின் உணவுத்தேவைகளை நிறைவேற்றும் பொருட்டு உணவகம் ஒன்றினை திறந்து நியாய விலையில் உணவுப் பண்டங்களை வழங்கியுள்ளதாக சங்கத் தலைவர் ம சிவசுப்பிரமணியம் தெரிவித்துள்ளார். (க)

அக்கராயன் போர் எழுச்சிக் குழுவின் ஆதரவில் இரு நாடகங்கள் மேடையேறக் காத்திருக்கின்றன

போர் எழுச்சி ஆண்டை முன்னிட்டு அக்கராயன் பிரதேசத்தில் எழுச்சியுடன நடைபெற்று வரும் போர் எழுச்சி விழாக்களில் அனைவரையும் சிந்திக்கவைக்க! வருகிறது ! அக்கராயன் போர் எழுச்சிக் குழுவின் ஆதரவில்

கிளி / ஊர்காவற்றுறை பல நோக்குக் கூட்டுறவுச்சங்கம் வழங்கும்

எஸ்.பாலாவின்:-

"கதைசொல்லும் கல்லறைகள்

நாடகமும்

யாழ்ப்பாணம் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் வழங்கும்

மௌலியின்

எங்கே! எங்கே என்று தெரிகிறதா

நாடகமும்

காணத்தவறாதீர்கள்

(க)

கிளி மாவட்ட கூட்டுறவுச் சங்கங்களின் ஒன்றியம் சார்பாக இப் பத்திரிகை கிளி மாவட்ட சிக்கன கடனுதவு கூட்டுறவுச் சங்கங்களின் சமாச அச்சகத்தில் 1999ம் ஆண்டு மே மாத வெளியீடாக அச்சிட்டு வெளியிடப்பட்டது.
பிரதம ஆசிரியர் ம.கனகலிங்கம், துணை ஆசிரியர் அன்ரன் அன்பழகன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org